## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

## அசல் வழக்கு எண். 53/2019

**07.03.2025**

**வா.சா.2. மார்க்கபந்து, த/பெ. சீனிவாசன், வ/64**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தற்போதைய சர்வே எண்.782/13 ஆகும். தாவா மொத்த சொத்தையும் சேர்த்து வழங்கப்பட்ட பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.782/1-ஆக இருந்து உட்பிரிவு செய்யப்பட்டு 782/13 வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நானும் எனது மனைவியும் அரசாங்கத்தை ஏமாற்றி மனை எண்.6-க்கு என் பெயரிலும், மனை எண்.10-க்கு என் மனைவி பெயரிலும் ஒரே குடும்பத்தில் இரண்டு நபர்கள் பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அது அரசாங்கத்தால் எங்களுக்கு வழங்கப்பட்டது. வாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வீடு கட்டி குடியிருந்தார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட பதிலில் வாதிகள் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது பொய்யாக இருந்தால் அதிகாரிகள் பார்த்தபோது குடியிருக்கவில்லை. அதற்க்கு முன்பே வீடு கட்டி குடியிருந்தார்கள். லட்சுமி என்பவர் அதை அபகரித்துவிட்டார். அதனால்தான் அங்கு குடியிருப்பு இல்லை என்று பதில் கொடுக்கப்பட்டுள்ளது. 2002-ஆம் ஆண்டு வரை வாதிகள் குடியிருந்தார்கள். அதன் பின்பு காலி செய்து விட்டதால் அந்த இடம் பாழடைந்துவிட்டது. 2014-ஆம் ஆண்டில்தான் லட்சுமி என்பவர் அருகில் இருந்த மனைகளை கிரையம் பெற்றுவிட்டு அந்த இடத்தில் வீடு கட்டாமல் தாவா சொத்தில் வீடு கட்டிவிட்டார். 1966, 1975, 1976 ஆண்டுகளில் பிரதிவாதியின் மாமினார் வடிவேல் நாயக்கர் என்பவர் கிரையம் பெற்ற சர்வே எண். 782/01-ல் அடங்கிய 3 ஏக்கர் 22 செண்டில் ஏற்கனவே பல நபர்கள் நத்தம் வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டு, அதன் மூலம் கிரையம் பெற்ற இடத்தில் பிரதிவாதி வீடுகட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான பதிலில் பிரதிவாதி வீடுகட்டி குடியிருந்து வருவதாகவும், கிரையம் பெற்ற ஆவணங்களின் மூலம் அவர் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த மனை எண்கள் வேறு மனை எண்கள் ஆகும். மேற்படி பதிலில் மேற்படி மனைகள் காலி இடமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அங்கு யாரையும் வாழவிடவில்லை. சின்னகண்ணு நாயர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அந்த ஊரிலேயே வாழ்ந்ததில்லை என்பதால்தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த ஊரில்தான் பெண் எடுத்தேன் மற்றும் அங்கு வாழ்ந்தேன். நான் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தேன் என்றாலும், அவர்கள் எந்தவித தவறான செயலும் செய்யவில்லை என்பதால்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

வாதி பட்டா வாங்கியுள்ளதாக குறிப்பிடப்படும் சொத்தானது 100 வருடங்களுக்கு முன்பே உக்கல் கிராம மக்களுக்காக மனைப்பிரிவுகளாக கொடுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தை வடிவேல், சின்னகண்ணு, முருகேசன் இன்னும் பல பேர் அனுபவித்து வந்தார்கள் என்றால், மேற்படி சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ள மனைகளில் அவர்கள் வாழ்ந்து வந்திருக்கலாம். இந்த தாவா சொத்தானது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்தாகும். எனது தங்கை 1-ஆம் வாதிக்கும் அந்த ஊரில் வீட்டு மனை வழங்கினார்கள் என்றாலும், அதை அவர்கள் விற்றுவிட்டு சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. தாவா இடத்தில் அரசாங்கத்தை ஏமாற்றி நானும், 1-ஆம் வாதியும் தாவா சொத்து அமைந்துள்ள இடத்தில் உள்ள மனையில் வீடு வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 5 வருடங்களுக்குள் அந்த இடத்தில் வீடு கட்டியிருக்க வேண்டும் என்றாலும், அந்த நிபந்தனையின் அடிப்படையில்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும், வேறு ஒருவடைய சொத்து என்பதால்தான் நாங்கள் அவ்வாறு வீடு எதுவும் கட்டவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் மாமனார் மற்றும் பிரதிவாதிக்கு சொந்தமானது என்று வாதிக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிறர் அனுபவித்திருந்த சொத்தில் ஏமாற்றி எனது தங்கை பட்டா பெற்றுள்ளார் என்றாலும், எனது தங்கைக்கு வேறு ஒரு வீட்டு மனை பட்டா உள்ளது என்றாலும் சரியல்ல. வாதி தாவா சொத்தை சட்டத்திற்க்கு முரணாக பெற்றதால்தான் அவர் அதை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். வாதி உண்மையிலேயே தாவா சொத்தை அனுபவித்திருந்தால் மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி செலுத்தியிருப்பார் என்றாலும், அதுபோன்று அனுபவிக்காததால்தான் மேற்படி ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.